# ★ படைகளுக்கு எதிரான கணிப்பு பிரச்னைகளை ஏற்படுத்தும்!

விலை ரூபா 5-00

ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 மாசி 1 இதழ் 3
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 13-2-1995

## ஆய்வாளர் எச்சரிக்கை!.!

(கொழும்பு)

போராளிகளிடமிருந்து நாட்டைக் காப்பாற்றுவதற்குத் தம்மை அர்ப்பணித்த படைத் தளபதிகள், படை அதிகாரிகள் அவமானப்படுத்தப்பட்டு, துரோகிகள் போன்று கணிக்கப்படும் ஒரு நிலை தோன்றியிருப்பதானது, படையினர் மத்தியில் எதிர் விளைவுகளைத் தோற்றுவிக்கும் அபாயம் இருப்பதாக இராணுவ ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர்.

சிறுபான்மையினரின் பிரச்

(4ம் பக்கம் பார்க்க)

## விசாரணைகளை சந்திக்க ஹமில்டன் தயாராம்

(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்புச் செயலர் ஹமில்டன் வனசிங்க, தம் மீது சுமத்தப்பட்டுள்ள ஊழல் குற்றச்சாட்டுகளை அரசாங்கம் விசாரிக்குமானால், அதை எதிர்கொள்ளத் தாம் தயாராக இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

ரஷ்ய ஆயுதக் கொள்வனவில் லஞ்சம் பெற்றார் என்று, அவர் மீது பரவலாகப் பொது சன ஐக்கிய முன்னணி அர

(4-ம் பக்கம் பார்க்க)

★ யாழ். நகரில்

# அரசின் போக்கைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்த முடிவு!

## வெகுஜன ஒன்றியம் ஏற்பாடு

[யாழ்ப்பாணம்]

ஸ்ரீலங்கா அரசின் திட்டமிட்ட அசமந்தப் போக்கைக் கண்டித்து, யாழ். நகரில் வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தினால் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடத்தப்படவுள்ளது. இந்த ஆர்ப்பாட்டப் பேரணி எதிர்வரும் 17ம் திகதி நடைபெறவுள்ளது.

ஸ்ரீலங்கா அரசினால் தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்ட அன்றாடப் பிரசனைகளுக்கு தீர்வு காண்பதிலும், எமது பிரதேசங்களில் வாழ்க்கை நிலையை தோற்றுவிப்பதிலும் ஸ்ரீலங்கா அரசு பின்னடிப்பு செய்வதனையும், தமிழீழமக்கள் மீது தொடர்ந்து இயல்பு இராணுவ அழுத்தத்தை பிரயோகிப்பதையும்கண்டித்து வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் மாபெரும் ஆர்ப்பாட்ட பேரணி ஒன்றை நடாத்த முடிவு செய்துள்ளது. இந்தப்பேரணியாழ். பல்கலைக்

(4-ம் பக்கம் பார்க்க)

★ அரசு — புலிகள்

## பேச்சுக்களின் முன்னேற்றமே உதவிகளை அதிகரிக்க செய்யும்

(கொழும்பு)

இலங்கையில் சகலரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வொன்றை நோக்கி விடுதலைப் புலிகளும் இலஙகை அரசாங்கமும் பேச்சுவார்த்தையைத் தொடரவேண்டும் என பொதுநலவாய நாடுகளின் ஆசிய பிரிவுக்கான செயலர் திரு. மார்க் கொமட் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் இலங்கையில் சமாதானம் நிலவவேண்டும். அப்போது தான் சர்வதேச நாடுகளும் அபிவிருத்தி முயற்சிகளில் ஈடுபட முன் வரும் பேச்சுவார்த்தையின் முன்னேற்றமே இலங்கைக்கு உதவும் கரங்களை பலப்படுத்தும் எனவும் கூறியுள்ளார்.

இத்தவேளை அரசு - புலிகள் சமாதானப் பேச்சு வார்த்தைகளை பல சர்வதேச அமைப்புகள் பெரும் ஆர்வத்துடன் எதிர்பார்த்திருப்பது குறிப்பிடத்தக்கது.

(4ம் பக்கம் பார்க்க)

## புதிய பாதுகாப்புச் செயலர் அடுத்த வாரம் நியமனம்

(கொழும்பு)

புதிய பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒருவர் அடுத்த வாரம் நியமிக்கப்படவுள்ளதாக கொழும்பு பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்த ஜென

(4-ம் பக்கம் பார்க்க)

## இராணுவக் கட்டமைப்பில் விரைவில் புதிய மாற்றங்கள்

(கொழும்பு)

அடுத்த சில வாரங்களில் இராணுவக் கட்டமைப்பில் புதிய மாற்றங்கள் ஏற்படவுள்ளதாக கொழும்புப் பத்திரிகைகள் கூறியுள்ளன.

பாதுகாப்பு அமைச்சின் செயலர் பதவியிலிருந்து ஹமில்டன் ராஜினாமா செய்து அந்த இடத்திற்குச் சிவில் அதிகாரியான திரு. பலபத்த பெண்டி நியமிக்கப்பட்டதன் மூலம் இந்த மாற்றங்களை

(4ம் பக்கம் பார்க்க)

## ஐரோப்பிய பிரதிநிதிகள் வடக்கு - கிழக்கிற்கு விஜயம்

[கொழும்பு]

இலங்கையில் வடக்கு-கிழக்கில் நிலவும் தற்காலிக சமாதானசூழ்நிலையை பயன்படுத்தி மேற்கு ஐரோப்பிய மற்றும் கனடா, நோர்வே போன்ற நாடுகள் அங்கு தஞ்சமடைந்துள்ள இலங்கைதமிழ் அகதிகளை திருப்பி அனுப்ப முயற்சி செய்கின்றன.

இதன் ஓர் அங்கமாகவே கனடா, நோர்வே போன்ற நாட்டு பிரதிநிதிகள் வடக்கு-கிழக்கு பகுதிகளுக்கு விஜயம் மேற்கொள்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இங்குள்ள நிலைமையை அவதானித்த பின்னர் மேற்கு ஐரோப்பிய நாடுகளில் உள்ள இலங்கை தமிழ் அகதிகளை திருப்பி அனுப்பும ஓர் நடவடிக்கையாகவே இவ்வாறு

(4ம் பக்கம் பார்க்க)

## சந்திரிகாவின் சமாதான முயற்சிகள் வெற்றியளிக்கும்!

### தொண்டா நம்பிக்கை

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எடுக்கும் முயற்சிகள் வெற்றியளிக்கும் என்று அமைச்சர் தொண்டமான் நம்பிக்கை தெரிவித்துள்ளார். இந்தியத் தொலைக்காட்சிக்கு அவர் அளித்த பேட்டியில் இவ்வாறு தெரிவித்தார்.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் மூலம் இப்பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு காணமுடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

பிரச்னைகளுக்குப் பேச்சு

(4ம் பக்கம் பார்க்க]

## ஹமில்டன் 5 கோடி ரூபா நஷ்டஈடு கோரிக்கை

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க உபாலி பத்திரிகை நிறுவனத்திடமிருந்து 5 கோடி ரூபா மானநஷ்டம் கோரியுள்ளார்.

தம்மைப்பற்றி பொய்யானதும் தமது பெயருக்கு களங்கம் விளைவிக்கக்கூடிய விதத்தில் செய்தியொன்றை உபாலி பத்திரிகை நிறுவனம் வெளியிட்டதற்கு எதிராகவுமே இந்த மானநஷ்டத்தை கோரியுள்ளார்.

கடந்த சில தினங்களாக ஹமில்டன் பற்றிய செய்திகள் தென்னிலங்கை பத்திரிகைகளில் முக்கிய இடம்வகிப்பதும் தெரிந்ததே. (கி-ரி)

## சொத்துக்களை வெளியிடுமாறு ஹமில்டனுக்கு அரசு உத்தரவு

(கொழும்பு)

தமது சொத்துக்களைப் பிரகடனப்படுத்துமாறு, பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கவுக்கு அரசு உத்தரவிட்டுள்ளது. சட்டவிரோதமான முறையில் திரு. ஹமில்டன் சொத்துக்களைச் சேர்த்துள்ளதாகக் குற்றம் சாட்டப்படுகிறது.

சர்ச்சைக்குரிய ரஷ்ய ஆயுதக்கொள்வனவில் ஹமில்டன் பல கோடி கமிஷனுக பெற்றி

(4ம் பக்கம் பார்க்க)

அறிவுக் களஞ்சியம்
பொது அறிவுப் போட்டியின்
விடை - வினாப் போட்டியும்
பரிசளிப்பும்
14 - 2 - 95
செவ்வாய்
காலை 10 மணிக்கு
யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில்
ஆர்வலர்கள் அனைவரும் வருக.
போட்டியில் பங்குபற்ற தெரிவானோர் காலை 8-30க்கு சமுகம் தருக (ஏ-4777)

## குரக்கன் செய்கை

(அரியாலை)

யாழ். குடாநாட்டிலுள்ள கிராம பகுதிகளில் நெல் அறுவடை முடிவடைந்ததும் சிறு தானியப் பயிரான குரக்கன் செய்கையில் விவசாயிகள் ஆரம்பித்துள்ளனர். பயிர்ச் செய்கைக்கு பயன்படுத்தப் படுத்தப்படாமல் இருந்த தரிசு நிலங்கள் தோட்ட நிலங்கள் யாவும் குரக்கன் செய்கைக்கு பயன்படுத்தப்படவுள்ளதாக தெரிய வருகின்றது. - 59

## கலந்துரையாடல்

(உடுவில்)

மருதனார்மடம்தொலைக்கல்வி நிலையத்தில் 1991-93,92-94, 93-95 ஆகிய பயிற்சி பெற்ற சகல பயிலுனர் ஆசிரியர்களும், போதனாசிரியர்களும் இன்று 13ம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு பரீட்சை தொடர்பான கலந்துரையாடலுக்கு நிலையத்துக்கு வருமாறு சிரேஷ்ட போதனாசிரியர் அறிவித்துள்ளார். - 109

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1995-02-13

திங்கள் இரவு

08-01 தளிர்கள் - சிறுவர்களுக்கான நிகழ்ச்சி
08-20 எங்கள் தேசம்
08-30 செய்திகள்
08-40 தரிசனம் நிகழ்ச்சியில் பரதக்கலைஞர் திருமதி லீலாம்பிகை செல்வராஜா அவர்களுடனான செவ்வி
09-00 இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

1995-02-14

செவ்வாய் காலை

07-02 மாவீரவணக்கம்
07-15 இன்றைய தாரகை
07-30 செய்திகள்
07-35 பத்திரிகைச் செய்திகள்
07-40 தாயகப்பாடல்கள்
08-00 காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்.

## தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

1995-02-13

திங்கள் மாலை

05-01 சிந்தனைச்சிதறல்
05-02 எழுச்சிகீதம்
05-10 புதியவை
05-15 ஆழியமுதம்
05-30 மாணவர் பக்கம்
06-00 சிந்தனைக்கு சில விநாடிகள்
06-02 நேயர் நெஞ்சம்
06-15 விளையாட்டுச் செய்திகள்
06-20 என் தெரிவுகள்
06-30 மாலைஒலிபரப்பு யாவும் நிறைவு பெறும்

# உலக வங்கியின் யோசனையை தீர்மானிக்க அமைச்சரவைகுழு

(கொழும்பு

உலக வங்கின் யோசனைகளை கலந்துரையாடித் தீர்மானம் எடுப்பதற்கு வசதியாக அமைச்சரவைக் குழு ஒன்று நியமிக்கட்பட்டுள்ளது.

உலக வங்கி, மற்றும் நிதி உதவி வழங்கும் நாடுகளில் சமர்ப்பிக்கபபடும் யோசனைகள், திட்டங்கள் பற்றி இந்த அமைச்சரவைக் குழு ஆராய்ந்து அந்த யோசனைகளை ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது பற்றி ஒரு தீர்மானம் எடுக்கும் அதிகாரமும் இந்தக் குழுவுக்கு வழங்கப்படவுள்ளது. வெளிநாடுகளுக்குச் செல்லும் அமைச்சர்கள் அந்த நாடுகளுடன் கலந்துரையாடி எடுக்கும முடிவுகள் இந்த அமைச்சரவைக் குழுவுக்கு சமர்ப்பிக்கப்படவேணடும்.

இந்த அமைச்சரவைக்குழுவில் பல சிரேஷ்ட அமைச்சர்கள் அங்கம் வகிக்கவுள்ளனர் என்று 'லங்காதீப' பத்திரிகை தெரிவித்துள்ளது.

-ம-சி

## திருடர்கள் கைது

(நெல்லியடி)

பட்டப்பகல்வேளை அறையை உடைத்து நீரிறைக்கும் இயந்திரத்தை திருட முற்பட்ட திருடர்களை அயலவர்கள் சுற்றி வளைத்து மடக்கிப் பிடித்து காவல்துறையினரிடம் ஒப்படைத்தனர்.

இச்சம்பவம் கடந்த திங்கட்கிழமை இருபாலை கோண்டாவில் வீதியிலுள்ள தோட்டமொன்றில் இடம்பெற்றது. (160-ரி)

# தமிழ் மருத்துவ நூல்களை பதிப்பிக்க ஏற்பாடு

(வேலணை)

இலங்கையில் பிரசித்திபெற்ற தமிழ்த் தேசிய மருத்துவ நூல்களை மீளப் பதிப்பதற்கு வடக்கு கிழக்கு மாகாண மகளிர் விவகார சுகாதார அமைச்சு முன்வந்துள்ளது.

இதற்கு முன்னோடியாக யாழ்ப்பாணத்தை அரசாண்ட பரராசசேகர மன்னனினால் இயற்றப்பட்ட பரராசசேகரம் என்ற நூலின் முதல் 9 பாகங்களையும் சேகா மன்னனால் இயற்றப்பட்ட சேகராசசேகரம் என்ற நூலையும் சொக்கநாதர் இயற்றிய தன்மாந்திரியம் எனற நூலையும் இருபாலைச் செட்டியார் இயற்றிய வைத்திய விளக்கம் என்னும் கைநூலையும், பாதாத்த சூடாமணி, அமுதகரம் என்ற நூலையும் மீளப்பதிப்பதற்கு யாழ்ப்பாணத்தில் இருந்து திருகோணமலைக்கு வடக்கு-கிழக்கு மாகாண மகளிர் விவகார சுகாதார அமைச்சின் திணைக்களத்தைச் சேர்ந்த ஒருவரால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. -75-சி

# பழ மரக் கன்று உற்பத்தியாளர் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

பழ மரக்கன்று உற்பத்தியாளர்களின் ஒன்றுகூடல் ஒன்று எதிர்வரும் 15ம் திகதி காலை 09-00 மணியளவில் திருநெல்வேலி விவசாயப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

பழ மரச் செய்கையின் அபிவிருத்திக்கு தூய பழ மரக்கன்று உற்பத்தி செய்யப்படுதல்அவசியமாகும் ஆகவே தூய பழமரக்கன்று உற்பத்தியாளர்களைபதிவு செய்து அவர்களது உற்பத்தியை உறுதிப்படுத்த வேண்டிய அவசியமும் உள்ளது.

இதற்காக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் விவசாய திணைக்களத்துடன் இணைந்து இவ் ஒன்று கூடலை நடாத்தி பழ மர அபிவிருத்தியை திட்டமிட்டமுறையில் முன்னெடுக்க உள்ளது. -சி

# 50 சதத்தால் நடந்த ஒரு கொலை

(கொழும்பு)

கடையில் சிகரெட் வாங்கிய போது மிகுதிப்பணமாக 50 சதம் கொடுக்கப்படாததால் எழுந்த சண்டையை தடுக்க முற்பட்ட குடும்பஸ்தர் ஒருவர் கொலை செய்யப்பட்ட பரிதாப சம்பவம் அண்மையில் கெஸ்பாவ பகுதியில் இடம் பெற்றுள்ளது.

மிகுதிப்டணம் தொடர்பாக கடைக்காரருக்கும் சிகரெட் வாங்கச் சென்றவருக்குமிடையில் எழுந்த வாய்த்தர்க்கம் கைகலப்பு வரை சென்றது.

இதனை தடுத்து நிறுதத முற்பட்ட குடும்பஸ்தர் ஒருவர் சண்டையின் போது இரும்புக் கம்பித்தாக்குதலுக்கு இலக்காகி மரணமானார். சந்தேக நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (சி)

# கங்கையை மாசுபடுத்தும் தொழிற்சாலைகள் மூடப்படும்

(புதுடில்லி)

கங்கை நதியை மாசுபடுத்தும் சுமார் 30பெரிய தொழிற்சாலைகளை உடனடியாக மூடிவிடும்படி இந்திய உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேற்படி தொழிற்சாலைகளிலிருந்து வெளியாகும்கழிவு நீரால் கங்கை நீர்பெருமளவில் மாசு படுத்திப்படுவதாக கூறியே மேற்படி 30 தொழிற்சாலைகளையும் மூடுமாறு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஏற்கனவே தாஜ்மகாலை அசுத்தப்படுத்தும் தூற்றுக்கும் மேற்பட்ட தொழிற்சாலைகளை மூட நீதிமன்றம் உத்தரவிட்டதும் தெரிந்தத்த. - சி

# உப மாவட்ட மட்ட உடற் பயிற்சி போட்டி

(உடுவில்)

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களம் இரண்டின் கோட்டமட்ட உடற்பயிற்சி போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

உபமாவட்ட மட்டத்திலான போட்டிகள் எதிர்வரும் 18, 21, 24ம் திகதிகளில்நடைபெறவுள்ளன.

பருத்தித்துறை, கரவெட்டி, மருதங்கேணி கல்வி கோட்டங்கள் பங்குபற்றும் வடமராட்சி உபமாவட்ட போட்டிகள் 18ம் திகதி நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

தெல்லிப்பழை, சங்கானை, சண்டிலிப்பாய் கல்விக்கோட்டங்களுக்கான பண்டத்தரிப்பு உபமாவட்டப் போட்டிகள் 21ம் திகதி மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

கோப்பாய், உடுவில் கோட்டங்கள் பங்குபற்றும் மருதனமட உபமாவட்ட போட்டிகள் 24ம் திகதி புத்தூர் ஸ்ரீசோமாஸ்கந்தாக் கல்லூரியில் நடைமெறும். -109

திருமலை-பருத்தித்துறை

# கப்பல் சேவை

(கொழும்பு)

திருகோணமலைக்கும் பருத்தித்துறைக்குமிடையிலான நோயாளர் கப்பல் சேவையை இம்மாதம் நடுப்பகுதியிலிருந்து நடாத்த செஞ்சிலுவைச் சங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

இந்தச் சேவையை நடாத்த புதிய கப்பலொன்று ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

ஏற்கனவே இச்சேவையில் ஈடுபட்டிருந்த 'பிளாம்பயன்' கப்பலின் ஒப்பந்தம் காலாவதியாகியுள்ளது குறிப்பிடத்தக்கது. கே-ரி

தென்மராட்சியில்

# கடற்றொழில் கடன்

(யாழ்ப்பாணம்)

கடற்றொழிலை ஊக்குவிக்குமுகமாக தென்மராட்சிக் சோட்டத்திலுள்ள சாவகச்சேரி வட்ட கடற்றொழிலாளர் ஒன்றியத்துக்குட்பட்ட 15 பயனாளிகளுக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கடற்றொழில் ஊக்குவிப்புக் கடன்களை வழங்கியுள்ளது.

கடந்த 31ம் திகதியன்று கிராமிய உற்பத்திக் குழுப் பகுதியினரூடாக வழங்கப்பட்ட இவ் ஊக்குவிப்புக் சுடன்களில் மூன்று பயனாளிகளுக்கு தலா பத்தாயிரம் ரூபா வீதமும் மிகுதி பன்னிரண்டு பயனாளிகளுக்கு தலா ஐயாயிரம் ரூபா வீதமும் மொத்தமாக 90,000 ரூபா கடன்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

-சி

# கடற்றொழிலாளருக்கு ம. எண்ணெ விநியோகம்

(கொழும்புத்துறை)

வலி-வடக்கு கடற்றொழில் சங்கங்களின் ஒன்றியத்தற்கு உட்பட்ட 13 சங்கங்களுக்கு தற்போது மண்ணெண்ணெ வழங்கப்பட்டு வருகிறது.

கீழே குறிப்பிடப்படடுள்ள கடற்றொழில் சஙக நிாவாகிகளுடன் எதிர்வரும் 15-ம் திகதிக்கு முன் நேரில சென்று பெற்றுக்கொள்ளுமாறு வலி-வடக்கு கடற்றொழில் சங்கத்தின் ஒன்றியச் செயலாளர் அறிவித்துள்ளார்.

சங்கங்களின் விபரம் பின்வருமாறு:- பலாலி, மயிலிட்டி, ஊறணி, காங்கேசன்துறை, வலித்தூண்டல், சேர்ந்தான்குளம், மாரீசன்கூடல், மாதகல் லூர்த்து மேரி, மாதகல் துறைமுக விநாயகர் சம்பில்துறை, சுழிபுரம், பொன்னாலை ஆகிய கடற்றொழில் சங்கங்களாகும். -154

# 3 நாட்கள் நடைபெறும் கலை, இலக்கிய கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக் கழகமும், வெளிச்சம் கலை இலககிய சமூக இதழும் இணைந்து மாபெரும் கலை, இலக்கிய கருத்தரங்கு ஒன்றை அடுத்த மாதம் 3-ம், 4-ம், 5-ம் திகதிகளில் நல்லூர் இளங்கலைஞர் மண்டபததில் தினமும் காலை 9 மணி முதல் முழுநாள் கருத்தரங்கமாக நடாத்தவுள்ளது.

தமிழீழத்தில் கலை இலக்கியத் துறைகளில் அவ்வத்துறை சார்ந்தபுலமையாளர்கள் பன்னிருவர் இக்கருத்தரங்கில் கலந்து கொள்கின்றனர். ஓவியம், இசை, அரங்கியல் சிறுகதை, நாவல், கவிதை, திரைப்படம், போராட்ட கால கலை, இலக்கியம் உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் ஆய்வுக் கட்டுரைகள் வாசிக்கப்பட்டு விவாதத்துக்கு எடுக்கப்படவுள்ளன.

யாழ். மாவட்டத்தின் சகல பகுதிகளிலிருந்தும் வன்னி, முல்லை, மன்னார் மாவட்டங்களிலிருந்தும் பேராளர்கள் இக்கருத்தரங்கத்தில் பங்குபற்ற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வெளிமாவட்டப் பேராளர்களுக்கு இலவச உணவு, மற்றும் தங்குமிட வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

தமிழீழ மட்டத்தில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள இக் கருத்தரங்கல் கலை. இலக்கிய ஆர்வலர்கள் அனைவரும் கலந்து கொள்ளலாம். கலந்து கொள்ள விரும்புவோர் தமது பெயர் விபரங்களை முன்கூட்டியே பதிவு செய்து உள்நுழைவு அட்டைகளை பெற முடியும்.

தமது பதிவை மேற்கொள்வோர் கோண்டாவிலிலுள்ள விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழக நடுவப்பணியகத்திலும் மற்றும் யாழ்ப்பாணம். வன்னி, முல்லை. மன்னார் ஆகிய மாவட்ட கலை, பண்பாட்டுக் கழக மாவட்டக் கோட்டப் பணிமனைகளிலும் இம்மாதம் 20ம் திகதிக்கு முன்னர் பதிந்து கொள்ளும்படி விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுப் பேரவை அறிவித்துள்ளது.

-சி

### மணிவாக்கு

அறிவு என்பது ஆற்றைப்போன்றது. அது எவ்வளவுக்கெவ்வளவு ஆழமாக இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு சந்தடியின்றி அமைதியாக இருக்கும்.

பேக்கன்

## நமது நோக்கு

### புதியபோக்கு

இலங்கையின் வெளியுறவு அமைச்சர் இனப்பிரச்சனைத் தீர்வுக்கு அமெரிக்க உதவியை நாடியுள்ளார் எனச் செய்தி வந்துள்ளது

உள்நாட்டுப் பிரச்சனையில் பிறநாட்டுத் தலையீட்டை அனுமதிக்கமாட்டோம் என்று மார்தட்டிய காலம் மாறிவிட்டதா?

இன்று புதிய போக்கு உருவாகி வருகிறது என்பதையா அமெரிக்க உதவியை நாடுவது காட்டுகிறது?

இரணவிலவில் அமைக்கப்பட்டு வரும் அமெரிக்க வானொலி நிலையம் சம்பந்தமாக பொதுசன ஐக்கிய முன்னணி புதிய நிலைப்பாட்டை எடுக்க வேண்டியளவிற்கு அமெரிக்க அழுத்தம் அமைந்துவிட்டது.

தைக்கப்பட்ட ஆடை இறக்குமதி போன்ற விஷயங்களில் அமெரிக்கா தாராளப் போக்கைக் கடைப்பிடிக்க முன்வரலாம்.

இந்தச் சூழ்நிலையில் இனப்பிரச்சனைத் தீர்வுக்கு அமெரிக்காவின் உதவியையும் முந்திக்கொண்டு நாடினால் அரசுக்கு வலுச்சேர்க்கும் நடவடிக்கையாக இருக்கும் என இலங்கை அரசு எண்ணிச் செயற்படுவது போலத் தெரிகிறது.

தவறான தகவல்களைத் தந்து தனது கண்ணோட்டத்தின் காணும்தீர்வைத் திணிக்க அரசு முற்படாது என நம்புகிறோம்.

முன்பு அமெரிக்காவிலேயே இயங்கிய பல பொது நிறுவனங்கள் தமிழர்கள் மீது இழைக்கப்பட்ட அநீதிகளைச்சுட்டிக்காட்டத்தவறவில்லை.

மனித உரிமை மீறல் நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டவர்கள் தமிழர்கள் என்பதை எவரும் மறந்து விடமாட்டார்கள்

இன்னும் உலக ஒத்துழைப்பு மன்றம் தமிழர்களின் நியாயமானகோரிக்கைசகள் வழங்கவேண்டுமெனக் குரல எழுப்பியதைக் கவனத்தில் எடுக்க வேண்டும்.

நிரந்தரத் தீர்வுஎன்பது பாதிக்கப்பட்ட மக்கள் பாதுகாப்பாக வாழ்வதற்கான வழிமுறைகளை வகுப்பது என்பதை அமெரிக்கா அறியாமலா இருக்கும்?

இலங்கையின் புதிய போக்கு நீதியான தீர்வுக்குஇட்டுச் செல்லவேண்டும் என்பதையே வலியுறுத்துகிறோம்!

## நுளம்பினால்பரவும்நோய்கள் அதிகரிக்கும் அறிகுறிகள்

(யாழ்ப்பாணம்)

அண்மைக்காலத்தில் ஏற்பட்ட காலநிலை மாற்றங்களால் நுளம்பினால் பரவும் நோய்கள் அதிகரிக்கும் வாய்ப்பு இருக்கிறது. நாட்டின் கிழக்குப் பகுதிகளில் இந்நோயின் தாக்கம் தெரிகின்றது. எமது பகுதிகளிலும் குறிப்பாக மலேரியா, டெங்கு காய்ச்சல் கூடி வருவதைகாண்கிறோம். நாம் தடுப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தாவிட்டால் 'யப்பான் பீ வைரஸ்' எனும் கிருமியினால் ஏற்படும் மூளைக்காய்ச்சல் பரவி அனர்த்தங்கள் புரியலாம்.

இவற்றை கட்டுப்படுத்தும் நடவடிக்கைக்காக யாழ். மாநகர சபை பின்வரும் நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

வடிகால்களில் நீர் தேங்கி நிற்பதைத் தடுக்கும் நடவடிக்கை விசேடமாக அமைக்கப்பட்ட பகுதியினால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

வீடுகளைத் தரிசிக்கும் நோய் காவித் தடுப்பு பிரிவினர் வீடுகளிலும் சுற்றாடலிலும் நுளம்பு உற்பத்தியை தவிர்க்க ஆலோசனை வழங்குவர்.

மலேரியாநோய்காணப்படும் இடங்களுக்கு அயலிலுள்ள வீடுகளுக்கு மலத்தியோன் தெளிக்கும் நடவடிக்கை.

குப்பை கூழம் உரிய முறையில் அப்புறப்படுத்தும் நடவடிக்கை மேற் குறிப்பிட்ட நடவடிக்கைகளுடன் மூளைக்காய்சல் விசேடமாக பரவாமல் தடுக்க கட்டாக்காலிப் பன்றிகள் மிருகங்களை அப்புறப்படுத்தும் திட்டம்.

இவற்றிற்கு பொதுமக்களும் இணைந்து ஒத்துழைக்காவிடில் எமது முயற்சிகளும் வெற்றியளிக்கமாட்டா. மக்கள் நெருக்கமாக வாழும் பகுதிகளில் பன்றிகள் வளர்ப்பதைத் தவிர்த்துக்கொள்ளுதல் ஒரு முக்கிய நடவடிக்கை யாகும். எமது பகுதிகளில் நுளம்பினால் பரவும் நோய்களை ஒழிக்க நகரவாழ் மக்களினது ஒத்துழைப்பு மிகவும் அவசியம் எனவும் மாநகர சுகாதார பிரிவு கேட்டுள்ளது.

-சி

## பொதுப்பணத்தைஇந்த அரசும் வீண்விரயம் செய்து வருகிறது

(கொழும்பு)

பொதுப்பணத்தை வீண் விரயம் செய்வதில் தாங்களும் ஐ. தே. க ஆட்சியாளர்களுக்கு சளைத்தவர்களல்ல என்பதை பொ. ச. மு ஆட்சியாளர்கள் நிரூபித்துள்ளதாக கொழும்பு பத்திரிகை ஒன்று கூறியுள்ளது.

அண்மையில் நடைபெற்ற சுதந்திரதினக் கொண்டாட்டங்களுக்காக அரச நிறுவனங்கள், அரச திணைக்களங்கள், அரச வங்கிகளில் பெறுமதிமிக்க 'மின் பல்ப்பு'களின் சோடனைக்காக பல லட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

இந்த அலங்கார வேலைகள் தொடர்பாக எந்த நிறுவனங்களினதோ, திணைக்களங்களினதோ, வங்கிகளினதோ தலைவர்களுடன் கலந்தாலோசிக்கப்படாமல் அரசு இவற்றை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டிருந்தது. இவற்றுக்காக பல லட்சம் ரூபா செலவாகும் என சுட்டிக்காட்டப்பட்டபோது 'முன்னைய' ஆட்சியின்போது இவற்றை எல்லாம் சுட்டிக்காட்டினீர்களா? நாங்கள் சொல்லுவதை நீங்கள் செய்யுங்கள் என பதில் வந்ததாம்,

ஐ தே. கவின் ஆட்சி இன்னமும் மாறவில்லை எனவும் அந்தப் பத்திரிகை விமர்சித்துள்ளது,

-சி

## 40,000 தொழில் நுட்ப ஊழியர்க்கு விரைவில் சம்பளம் உயரும்

(கொழும்பு)

அரச சேவையிலுள்ள நாற்பதாயிரத்துக்கும் மேற்பட்ட நடுத்தர மட்டத்திலான தொழில் நுட்ப ஊழியர்களின் சம்பளத்தை மறுபரிசீலனை செய்ய அரசு முன்வந்துள்ளது.

சம்பளத் திருத்தம், குறைபாடுகள் தொடர்பாக ஆராய்ந்த குழுவின் சிபார்சுகளை அரசாங்கம் ஏற்றுள்ளது நடுத்தர மட்டத்திலுள்ள தொழில் நுட்ப ஊழியாகளின் சம்பளத்தை திருத்தி அமைப்பது தொடர்பான பிரச்னைகள் பற்றி ஆராய்வதற்காக இந்தக் குழு நியமிக்கப்பட்டது.

இந்தச் சேவையில் பல்வேறு பிரிவுகளும் சம்பள முறைகளும் இருப்பதை பரிசீலனை செய்த பின்னர் பாதிக்கப்பட்ட சேவைப் பிரிவில் உள்ளவர்களின் சம்பளங்களை மறு பரிசிலனை செய்வதென தீர்மானிக்கப்பட்டுள்ளது. திருத்தப்பட்ட சம்பள விகிதத்தின்படி வகுப்பு-II B அல்லது ஆட்சேர்ப்பு வகுப்பில் உள்ளவர்களின் சம்பளம் வருடம் ஒன்றுக்கு 30,060 ரூபாவிலிருந்து ஆரம்பமாகும். இது 16 வருடங்களில் வருடம் ஒன்றிற்கு 41,940 ரூபாவாக அதிகரிக்கும்.

விசேட வகுப்புச் சம்பளம் ஆரம்பத்தில் வருடமொன்றிற்கு 49 200 ரூபாவிலிருந்து 15 ஆண்டுகளில் 72,600 ரூபா வரை அதிகரிக்கும். பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் நடுத்தர மட்டத்திலுள்ள தொழில் நுட்ப சேவையிலுள்ளவர்களின் தற்பொதைய சம்பள முறையை பரிசலனை செய்யுமாறு அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் திணைக்களங்களுக்கும் பணிப்புரை விடுத்துள்ளார்.

-சி

## ராஜீவ் கொலை விசாரணை

## மத்திய, மாநில அரசுகளுக்கு ஜெயின் கமிஷன் எச்சரிக்கை

(புதுடில்லி)

ராஜீவ்கொலை விசாரணைக்கு போதுமான விபரங்கள் ஆவணங்களை வழங்காவிட்டால் மத்திய மாநில அரசுகளின் அனைத்து புலனாய்வு அமைப்புக்களின் தலைவர்களையும் விசாரணைக்கு அழைப்பதுடன் ஆவணங்களை வழங்காவிடின் அவற்றை மூடி மறைப்பதாக கூறுவேன்.

இவ்வாறு ராஜீவ் கொலையின் பின்னணியில்சதித்செயல் ஏதும் இருந்ததா என்பது குறித்து விசாரணை நடாத்தி வரும் ஜெயின் கமிஷன் மத்திய அரசையும் தமிழக அரசையும் எச்சரித்துள்ளது.

நீதிபதி தலைமையிலான இந்த கமிஷன், ராஜீவ்கொலை விசாரணைக்காக சமர்ப்பிக்குமாறு கூறியுள்ள பல தஸ்தாவேஜுகளையும் ஆவணங்களையும் பாதுகாப்பு இரகசியம் வெளியே வந்துவிடக்கூடாதெனக் கூறி மத்திய மாநில அரசுகள் இந்தக் கமிஷன் முன் சமர்ப்பிக்க மறுத்துவருவதையடுத்தே இக்கமிஷன் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.

இதேவேளை ராஜீவ் கொலை மூலம் ஆட்சி வாய்ப்பை பெற்ற திரு. நரசிம்மராவ் ஏன் கொலை விசாரணையை தாமதப்படுத்துகிறார் என்பது தெரியவில்லை என முன்னாள் அமைச்சரும், காங்கிரஸிலிருந்து வெளியேற்றப்பட்டவருமான திரு. அர்ஜன்சிங் கேட்டுள்ளார்.

-சி

## பிரான்ஸ், பங்களாதேஷிற்கும் சந்திரிகா செல்வார்

[கொழும்பு]

இந்தியாவுக்கு அடுத்த மாதப் பிற்பகுதியில் விஜயம் செய்யவுள்ள சந்திரிகா, பின்னர் பங்களாதேஷுக்கும், ஏப்ரல் மாதத்தில் பிரான்ஸுக்கும் விஜயம் மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

ஏப்ரல் மாத இறுதியில் பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் நடைபெறவுள்ள உலக வங்கியின் வருடாந்த மாநாட்டில் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்திலும் உரையாற்றவுள்ளார்.

இதேவேளை தெற்காசியப் பிராந்திய நாடுகளின் உச்சி மாநாடு (சார்க்), ஏப்ரல் நடுப்பகுதியில் புதுடில்லியில் இடம்பெற இருப்பதால் அந்த மாநாபட்டிலும் ஜனாதிபதி கலந்துகொள்வார்.

க-சி

வீட்டுக்குப் பழமரங்கள்
வீதிக்கு நிழல் மரங்கள்.

## இன்று

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை கிழக்கு ஸ்ரீ சந்திரசேகர விநாயகர் ஆலய உற்சவ 7-ம் நாளான இன்று 13-ந் திகதி திங்கட்கிழமை 6 மணிக்கு கைலாச வாகனத் திருவிழா இடம் பெறும். -154

0 0 0

(கொழும்புத்துறை)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் இன்று 13-ந் திகதி திங்கட்கிழமை காலை மாசி மகச் சங்கராந்தி விசேட அபிஷேகம், பூசை, வழிபாடு, ஆராதனைகள் நடைபெறும். -154

## பலதும் பத்தும்

### உணவுச் சிக்கல்!

ஐ. தே. க. தலைமையகமான சிறிகோத்தாவில். . அண்மையில்... கட்சி அமைப்பாளர்கள் பலரையும் அழைத்திருந்தார் ரணில் விக்கிரமசிங்கா... ஆலோசனை கலக்க!

பகல் 12-00 மணி — விசேட விருந்தினர் ஒருவர் வருகிறார்... வேறு யாருமல்ல... அவர் மனைவி மைத்திரிய! கட்சி உறுப்பினர்களுக்குத் தனது மனைவியை அறிமுகம் செய்து வைத்து விருந்தும் அளிக்க அவர் திட்டமிட்டிருந்தார்.

பிரதான மேசையில்... ரணில் தம்பதிகள், செயலாளர் காமினி அத்துக்கோறளை, விஜயபால மென்டிஸ் அமர்ந்திருந்தார்கள். எல்லோருக்கும் இறைச்சி வகைகளும் கோழி புரியாணியும் வருகிறது. ஒருவர் கைவைக்கவில்லை.

உணவுக்குப் பொறுப்பாக இருந்த கண்டி உறுப்பினர் அப்துல் காதர்... சங்கடப்பட்டுத் தாவர உணவுப் பார்சலை எடுப்பித்தாராம் விஜயபால மென்டிசுக்கு!

— மயூரன்

## இராசி பலன்

13-02-1995

திங்கட்கிழமை

(தமிழுக்கு மாசி 0-1)

திரயோதசி: மாலை 6-01 வரை, புனர்பூசம்: முற்பகல் 11-53 வரை, அமிர்த சித்த யோகம், இராகுகாலம்: காலை 8-04 முதல் 9-34 வரை, சுபவேளை: நண்பகல் 12-34 முதல் 2-04 வரை.

மேடம்: அதிக பிரசங்கம், வீண்பழி, எதிர்பாராத துயர்.

இடபம்: வயோதிபர் ஆசி, தொழில்லாபம், மனமகிழ்ச்சி.

மிதுனம்: பயண துன்பம், பயனற்ற செயல், காரிய தடை.

கடகம்: அறிஞர் சகவாசம், அதிகாரிகள் உதவி, தியானம்.

சிங்கம்: நோய் வாட்டும், கடமை தவறுதல், கண்டிப்பு.

கன்னி: இல்லச்சிறப்பு, வீட்டில் சுபகாரியம், தெய்வீக செலவு.

துலாம்: சகோதர பாசம், புத்திரர்பெருமை, மனமாற்றம்.

விருச்சிகம்: வீண்யோசனை, பணமுடை, குற்றம் சொல்லல்.

தனுசு: பிறர் துயரம், தொழில் பாதிப்பு, குடும்பக் கவலை.

மகரம்: கலந்துரையாடல், பெண் சகாயம், முயற்சி பலிதம்.

கும்பம்: சுபச்செய்தி, பிடிவாத குணம், பணப்புளக்கம்.

மீனம்: மனக்கொதிப்பு, வீண் தகராறு, அகால உணவு.

ஜோஸ்யர்

# பாதுகாப்புச் செயலராக சிவில் அதிகாரி நியமனத்தால் கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளது!

[கொழும்பு]

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பதவிக்கு சிவில் அதிகாரி ஒருவரை நியமனம் செய்தது தொடர்பாக பலதத கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டுள்ளதாக பி. பி. சி சிங்கள சேவையில் தெரிவிக்கட்பட்டது.

பி. பி சி. சந்தேசயவில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

பாதுகாப்பு அமைச்சின் செயலாளரான முன்னுள் இராணுவ அதிகாரியை நீக்கிவிட்டு அந்த இடத்துக்கு சிவில் அதிகாரி ஒருவா நியமனம் செய்யப்பட்டிருக்கிறுர். ஜனநாயக ரீதியில் ஆட்சி நடாத்தும் நாடுகளில் பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரிகளாக நியமிக்கப்படுவர்கள் சிவில் அதிகாரிகள் தான் இதைத்தான் கடந்த காலத்தில் இலங்கையில் உள்ள அரசாங்கங்கள் பின்பற்றும் முறையாக இருந்தது.

1977-ம் ஆண்டு பதவிக்கு வந்த ஐக்கிய தேசியக்கட்சி அந்த நடைமுறையை மாற்றியது. ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகளே பாதுகாப்பு அமைச்சில் உயர் பதவிகளுக்கு நியமித்தது.

சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு எதிராக இராணுவத்தினர் நடந்து கொள்கின்றனர் என்று ஜனுதிபதி கடந்த காலத்தில் கூறினுர். விடுதலைப் புலிகளோடு அரசாங்கம் நடாத்திவரும் சமாதானப் பேச்சுவார்த்தைகளால் யுத்தம் தேவையற்றது என்று கருதியதால் பாதுகாப்பு அமைச்சின் செயலர் பதவி சிவில் அதிகாரிக்கு வழங்கப்பட்டிருக்கலாம்.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் முறிவடைந்தால் யுத்தம் ஆரம்பமாகும் என்றல் பாதுகாப்பு அமைச்சின் செயலர் பதவி இராணுவ அதிகாரிகளுக்கு கொடுப்பது உகந்தது என சிலர் கூறுகிறுர்கள், யுத்தத்தை வெற்றி கொள்வதற்கு, திடீர் முடிவுகள் எடுப்பதற்கும், ஆணையிடுவதற்கும், சிவில் அதிகாரியைவிட, இராணுவ அதிகாரிகளே நியமிப்பது சிறந்தது என்றும் பி. பி. சி. மேலும் தெரிவித்தது.

(ம ரி)

## ● மட்டு. கல்குடாவில் பொலிஸ்—ராணுவ நிலைகள் பலப்படுத்தப்படுகிறது

(மட்டுநகர்[

மட்டக்களப்பின் கல்குடா பகுதியில் சிறிலங்கா பொலிஸாரும் இராணுவத்தினரும் தமது நிலைகளை பலப்படுந்தி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

கல்குடாவில் பிரதான சந்தி மக்களின் போக்கு வரத்துக்கு தடைசெய்யப்பட்டு அங்குள்ள பொலிஸ் நிலையம் பலப்படுத்தப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. [ரி]

## இறக்குமதிப் பொருட்களின் விலைகள் குறைக்கப்படும்

[கொழும்பு]

வெளிநாடுகளிவிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களில் அனேகமான பொருட்களின் விலைகள் குறைக்கப்படுமென சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது

இதன்படி வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் 6 500 பொருட்களில் 2ஆயிரத்து ஐந்நூறு பொருட்களின் விலைகள் குறைக்க படும் எனவும் அறியப்படுகிறது.

தற்போதைய அரசாங்கத்திஞல் சமர்ப்பிக்கப்பட்ட முதலாவது வரவு-செலவு திட்டத்தில் அறிவிக்கப்பட்ட இறக்குமதிதீர்வை குறைப்புக் காரணமாகவே இவ்விலைக்குறைப்பு ஏற்படவுள்ளதாம். [க-ரி]

## பல கிராமசேவகர்கள் பதவி நீக்கப்படலாம்

(கொழும்பு)

ஐ. தே. க. அரசிஞல் கமத்தொழில் சேவை அதிகாரிகளுக்கும் விசேட சேவை உத்தியோகத்தர்களுக்கும் வழங்கப்பட்டிருந்த கிராம சேவகர் பதவியை, தற்போதைய அரசாங்கம் நீக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தற்பொழுது 14,850 கிராமசேவகர்களும் பதவியில் இணைக்கப்பட்டுள்ள மேலும் பல கிராம சேவகர்களும் அனுராதபுரத்தில் ஒன்று கூடிதாம் மேற்கொள்ள இருக்கும் எதிர்ப்புணர்வுக்கு எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சியை ஆதரிக்குமாறு கோர இருக்கின்றனராம்.

அரசாங்கம் கிராம சேவகர் பதவியை இவர்களுக்கு வழங்காது போஞல் வழக்கு தாக்கல் செய்ய இவர்கள் உத்தேசித்திருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (ம - சி)

## முன்ஞன் எம். பி.க்களின் 12 ஆடம்பர வாகனங்கள் ஏலத்தில் விற்கப்பட்டன

(கொழும்பு)

முன்னைய அரசாங்கத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்களிஞல் பாவிக்கப்பட்ட மேலும் 12 ஆடம்பர மோட்டார் வண்டிகள் ஏலத்தில் விற்கப்பட்டன.

இந்த விற்பனை மூலம் ஒரு கோடி 60 லட்சம் ரூபா வருமானம் அரசாங்கத்துக்கு கிடைத்துள்ளது. பத்தரமுல்ல 'செத்சிறி' பாயாவில் 16 ஆடம்பர மோட்டார் வண்டிகள் நேற்று ஏலத்தில் விடப்பட்டன.

முதலாவது ஏல விற்பனை சென்ற வருடம் நவம்பர் மாதத்தில் இடம் பெற்றது. இந்த ஏலவிற்பனையில் பென்ஸ் மோட்டார் வண்டிகள் உட்பட ஆடம்பர வாகனங்கள் விற்பனைக்கு விடப்பட்டன. 16 வாகனங்களில்12 வாகனங்களே உடனடியாக விற்கப்பட்டன. ம-ரி

## பி. பி. ஸி ஆனந்தி சந்திப்பு

(யாழ்ப்பாணம்]

தமிழீழத்துக்கு வருகைதந்திருக்கும் பி. பி. ஸி உலக சேவையின் தமிழோசையைச் சேர்ந்ததிருமதி ஆனந்தி சூரிய பிரகாசம் அவர்களுடனுன சந்திப்பு ஒன்று இன்று 13-ம் திகதி திங்கள் மாலை 4 மணிக்கு கோண்டாவிலுள்ள கலை பண்பாட்டுக்கழக நடுவப்பணியத்தில் நடைபெறவுள்ளது.

### யாழ். நகரில்

1-ம் பக்கத் தொடர்ச்சி)

கழக கலைப்பீட மைதானத்திலிருந்து ஆரம்பமாகவுள்ளது.

இது சம்பந்தமாக நேற்று யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில வெகுஜன அமைப்புக்களின் பிரதிநிதிகளின் கூட்டம் நடைபெற்றது. இப்பிரதிநிதிகள் கலந்து கொண்ட கலந்துரையாடலில் பின்வரும் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் தயாரிக்கப்பட்டு ஆர்ப்பாட்டப் பேரணியின் இறுதியில் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் ஊடாக ஸ்ரீலங்கா ஜனுதிபதிக்கும் வெளிநாட்டு தூதுவராலயங்களுக்கும் கையளிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.

பொருளாதார தடையை முற்ருக நீக்கி தென்னிலங்கை விலைகளுக்கே பண்டங்கள் தடையின்றி, தட்டுப்பாடின்றி கிடைப்பதற்கான வழிவகைகள் செய்யப்படவேண்டும், பூநகரி தரைப்பாதை ஊடாக சுதந்திரமான சோதனைகளற்ற சுயாதீனமான போக்குவரத்தை மக்கள் மேற்கொள்வதற்காக பூநகரி பிரதேசத்தில் இருந்து இராணுவத்தை அகற்றவேண்டும், இராணுவத்திஞல் கைப்பற்றப்பட்ட பிரதேசத்தில் இருந்து இராணுவத்தினரை அகற்றி இடம் பெயர்ந்த மக்கள் சொந்த இடங்களில் குடி அமர்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

கடற்ருெழிலில் ஈடுபடும் மக்கள் சுதந்திரமாகவும், அச்சமின்றியும் தமது தொழிலை மேற்கொள்ளும்முகமாக கடல் வலயத் தடைச் சட்டங்களை முற்ருக நீக்குதல் வேண்டும், காலவரையறையின்றிநிரநதர யுத்த நிறுத்தம் மேற்கொள்ளப்படவேண்டும் வடக்கு-கிழக்கில் புனர் நிர்மாண அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் உடன் மேற்கொள்ளப்பட வேண்டும்.

மேற்படி கோரிக்கைகள் நிறை வேற்றுவதன் மூலம் எமது பிரதேசத்தில் இயல்பு நிலையை ஸ்ரீலங்கா அரசு தோற்றுவிப்பதோடு, சமாதான பேச்சு வார்த்தைகளை ஸ்ரீலங்கா அரசு' தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இழுத்தடிக்காது துரிதமாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டுமென வெகுஜன அமைப்புக்களின் பிரதிநிதிகள் வலியுறுத்தினர்,

மேலும், இந்திய மீனவர்கள் எமது கடல் பிரதேசங்களில் அத்துமீறி மீன்பிடிப்பதை தடுப்பதற்கான ஏற்பாடுகளை ஸ்ரீலங்கா அரசு செய்ய வேண்டுமென கோருவது எனவும்தீர்மானிக்கப்பட்டது. [ரி]

## தமிழக மீனவர்கள் மீதான தாக்குதல்கள் குறித்து இந்தியப் பிரதமருக்கு புகார்

(சென்னை)

தமிழக மீனவர் இலங்கை கடற்படையினரால் அடிக்கடி தாக்கப்படும் சம்பவங்கள் குறித்து பிரதமர் பி. வி. நரசிம்மராவிடம் முறையிடப் போவதாக தமிழக இந்திரா காங்கிரஸ் கட்சி தலைவர் குமரி அனந்தன் தெரிவித்துள்ளார்

இதேவேளையில் இராமேஸ்வரத்துக்கு அண்மையில் தனுஷ்கோடிக் கடல் பிரந்தியத்தில் அண்மையில் மீன்பிடித்துக்கொண்டிருந்த தமிழக மீனவரை இலங்கை கடற்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஐவர் காயமடைந்ததும், ஐவர் சிறுகாயமடைந்ததும் குறிப்பிடத்தக்கது, (க ரி)

### விசாரணைகளை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சாங்கம் குற்றம் சுமத்தியுள்ளதுடன் அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவும் தயாராகி வருகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஜெனரல் ஹமில்டன் வனசிங்க தமது பதவிக் காலத்தில், ஒழுங்கற்ற முறையில் நாட்டுக்கு வெளியிலிருந்து படையினருக்குத்தேவையான ஆயுதங்களைச் கொள்வனவு செய்துள்ளதாகவும் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளது குறிப்பிடத்தக்கது. ம-ரி

### புதிய பாதுகாப்புச்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ரல் ஹமில்டன் வனசிங்க இப்பதவியை இராஜினுமா செய்தபின்னர் ஜனுதிபதியின் செயலாளராக இருக்கும் திரு. பாலபத்தபெண்டி பதில்பாதுகாப்பு செயலாளராக அண்மையில் நியமனம் செய்யப்பட்டார்.

திரு. பாலபத்தபெண்டியின் நியமனம் படை வட்டாரங்களில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கிறது, நிரந்தர செயலாளர் ஒருவர் இப்பதவிக்கு நியமிக்கப்படும்வரை பாலபத்தபெண்டி இப்பதவியிலிருப்பார் என்று தெரிவிக்கப்பட்டது.

தற்போது நிரந்தர செயலாளர் ஒருவரை நியமிக்கும் பொருட்டே புதிய பாதுகாப்பு செயலாளர் அடுத்த வாரம் ஜனுதிபதியினுல் நியமிக்கப்படவுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. ரி

### சொத்துக்களை

(1-ம பக்கத் தொடர்ச்சி)

ருக்கலாமெனகருதப்படுகிறது. இது தொடர்பாக நிரந்தர ஆணைக்குழு விசாரணைகளை நடத்தவுள்ளது.

ஆயுதக் கொள்வனவு மோசடிகள் குறித்து விசாரணையை எதிர்நோக்கியுள்ள ஹமில்டன் நாட்டை விட்டுத் தப்பிச் செல்லாதவாறு, அவரது கடவுச்சீட்டையும் அரசு பறிமுதல் செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறபோதிலும் தமது கடவுச்சீட்டு தம்மிடமே இருப்பதாக ஹமில்டன் தெரிவித்துள்ளார். 61வயதான ஹமில்டன் இந்தியாவில் கல்வி கற்கும் தமது பிள்ளைகளைப் பார்வையிடச் செல்லவிருந்த இவ்வேளையில் அவரது பயணம் தடுத்து நிறுத்தப்பட்டது.

இதேவேளை அரசியல்வாதிகளால் இந்த நாடு பட்ட அவலங்களைத் தம்மீது சுமத்துவதற்கு, அரசு முயல்வதாக ஹமில்டன் கண்டனம் தெரிவித்துள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. சி-ரி

### ஐரோப்பிய

1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரதிநிதிகள் விஜயம் செய்கின்றனராம்.

இலங்கை தமிழ் அகதிகள் பிரச்னை மேற்கு ஐரோப்பிய மற்றும் நாடுகளில் பெருமளவிற்கு விஸ்வரூபம் எடுத்துள்ளமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. (க-ரி)

### சந்திரிகாவின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கு இது ஒரு சாதகமான நிலை என்றும். இனப் பிரச்னைக்குத் தீர்வு காணும் முயற்சிகளுக்கு முன்னுரிமை அளித்துள்ள ஒரே ஒரு தேசியத் தலைவர் திருமதி சந்திரிகா குமாரதுங்க என்றும் அவர் கூறினுர். -ரி

### அரசு—புலிகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைக்கான உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் எதிர்வரும் ஏப்பிரல் மாதத்தில் பிரான்ஸ் தலைநகர் பாரீஸில் நடைபெறவுள்ளதாகவும் சமாதானப் பேச்சுக்களின் முன்னேற்றமே இலங்கைக்கான உதவிகளை அதிகரிக்கச் செய்யும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. இக்கூட்டத்தில் ஜனுதிபதி சந்திரிகா குமாரதுங்கா கலந்து கொள்ள விருப்பது குறிப்பிடத்தக்கது. (க - ரி)

### படைகளுக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

னைகளை எதிர்கொண்டு தீர்க்கத் தவறிய அரசியல்வாதிகள் அனைவரும், இன்று தோல்விகளைப் படையினரின் தலைமீது கட்டிவிடப் பார்ப்பது எதிர்காலத்தில் பாரிய பிரச்னைகளைத் தோற்றுவிக்கும்.

நாட்டில் கொழுந்துவிட்டு எரியும் பிரச்னையைத் தமது கட்சி நலன்களுக்காகப் பயன்படுத்திய அரசியல்வாதிகள், இப்பிரச்னைக்குச் சரியான தீர்வைக் காணுது இராணுவத் தீர்வையே நம்பி இருந்தனர். தற்போது தமது வசதிக்கேற்ப படை அதிகாரிகள் மீது ஏதாவது குற்றச்சாட்டைச் சுமத்தி அவர்களைக் களங்கப்படுத்தி வருவதாகவும் அந்த ஆய்வாளர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர். சி-ரி

### இராணுவக்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

அரசு உறுதி செய்துள்ளது.

முப்படைகளின் தளபதியான ஜனுதிபதி, சகல படைகளையும் தனது நேரடிக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரும் விதத்தில் இந்த மறுசீரமைப்பு நடவடிக்கைகளைத் துரிதமாக மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளார். நீண்ட காலப்போக்கில் இது எவ்வளவு தூரம் வெற்றிபெறும் என்பது தற்போது கேள்விக் குறியாகவே உள்ளது.

தற்போதைய சமாதான முயற்சிகள் முறிவடையும் பட்சத்தில், இவற்றுக்கெல்லாம் பதில் சொல்லவேண்டிய ஒரு நிலைக்கு ஜனுதிபதி சந்திரிகா தள்ளப்படுவார் என 'சண்டே லீடர்' தெரிவித்துள்ளது. -சி

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 13-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office SriLanka under Licence Number B/16336/B-